**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 326/மா/**2023**

நாள்: **16 .11.2023**

| | | |
|---|---|---|
| திரு.மணவைக்கண்ணன் (எ) M.கண்ணன்<br>நாகர்கோவில் | – | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்,<br>நாகர்கோவில் மாநகராட்சி | – | எதிர்மனுதாரர் |

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், பார்வதிபுரம், கனரா வங்கி பில்டிங், எண்.8 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.மணவைக்கண்ணன் (எ) M.கண்ணன் என்பவரின் **17.10.2023** நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் **19.10.2023**–ல் பெறப்பட்டு, **326**/மா/**2023** என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், பார்வதிபுரம், கனரா வங்கி பில்டிங், எண்.8 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.மணவைக்கண்ணன் (எ) M.கண்ணன் என்பவர் தனது **1710.2023** நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சியில் **2022–2023** மற்றும் **2023–2024**ம் நிதியாண்டில் நடந்த கட்டுமான பணிகள் மிகவும் தரமற்றது. குறிப்பாக மீனாட்சிபுரம் பரதர் தெருவில் சாலை அமைத்து ஒரு மாதமேயான கான்கிரீட் தளம் மிகவும் மோசமான நிலையில் போடப்பட்டதாக பொதுமக்கள் என்னிடம் புகார் கூறியதால் **10.09.2023** அன்று நான் நேரடியாக பார்வையிட்டு சாலையை வீடியோ பதிவு செய்து எனது முகநூலில் (Face Book) கணக்கில் பதிவிட்டேன். எதிர்மனுதாரருக்கும் அனுப்பி வைத்தேன். அன்றையதினம் இரவே சில ரவுடிகள் என்னை மிரட்டினார்கள். நான் காவல் நிலையத்தில் புகாரளித்தேன். FIR பதிவு செய்து நடவடிக்கை எடுத்தார்கள். மேலும்

நாகர்கோவில் மாநகராட்சியில் போடப்பட்ட கான்கிரீட் சாலைகளை ஆய்வு செய்து எதிர்மனுதாரர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க தங்களை பணிந்து வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 06.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 10.11.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் 10.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை.

5) நாகர்கோவில் மாநகராட்சி உதவிப்பொறியாளர் 10.11.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.

" நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் 2022–23ன் கீழ் நாகர்கோவில் மாநகராட்சியில் உள்ள 16 சாலைகளில் புதிய ரோடு அமைக்க 1.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிர்வாக ஆணை பெறப்பட்டும், மேலும் 11.04.2023ல் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திலிருந்து தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒப்பந்தப்புள்ளிகள் இணையத்தில் கோரப்பட்டும், நாளிதழில் விளம்பரங்கள் செய்து முறைப்படி கோரப்பட்டது. எனவே மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் எவ்வித முறைகேடும் ஏற்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் 10.11.2023 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6) நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் தனது 10.11.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-**

" எதிருரையில் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ள சங்கதிகளைத் தவிர புகாரில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை ஆகும்.

மேற்படி புகார் மனு சட்டப்படியும் ஞாயப்படியும் நிலைக்கத்தகுந்தது அல்ல.

31.03.2023 நாளிட்ட அரசாணை எண்.192ன்படி நகர்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் 2022–23ன் கீழ் நாகர்கோவில் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 4.62 கி.மீ. நீளம் கொண்ட 16 சாலைகளில் புதிய ரோடு அமைக்க ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் நிர்வாக ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திலிருந்து முதன்மை பொறியாளர், சென்னை 11.04.2023 தேதியிட்ட R.O.C. No.001/2022/Do1–ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கினார்.

அவ்வாறு வழங்கப்பட்ட நிர்வாக ஆணை மற்றும் தொழில் நுட்ப அனுமதியின் அடிப்படையில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஒப்பந்தப்புள்ளி கோரினார். இரு ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கிடைக்கப்பெற்றது. அவர்கள் (1) M/s. ராமலிங்கம் எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் (2) நிர்மல் சிங் பூபதி ஆவர். அவற்றில் மதிப்பீட்டை விட 0.1% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரியிருந்த முதல் ஒப்பந்ததாரர் M/s.ராமலிங்கம் எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படி நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் 08.05.2023 அன்று M/s.ராமலிங்கம் எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கினார்.

ஆகஸ்ட் மாத இறுதியில் மீனாட்சிபுரம் R.C. பரதர் தெருவில் சாலை அமைக்கும் பணி நிறைவுற்றது. நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு முகநூல் மற்றும் அலைபேசி வாயிலாக புகார் வரப்பெற்றதால் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் அப்பணியில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை சீர்செய்யக்கோரி அந்த ஒப்பந்ததாரருக்கு 05.10.2023 அன்று அறிவிப்பு அனுப்பினார். மேலும் அந்த பணியினை பொறுத்து ஒப்பந்ததாரருக்கு எந்த பணமும் பட்டுவாடா செய்யப்படவில்லை.

மனுதாரர் கூறும் சாலையின் தரத்தினை கண்களால் பார்த்து உறுதி செய்ய இயலாது. சாலையின் தரத்தினை Compressive strength கருவியின் மூலம் பரிசோதனை செய்த பின்னரே உறுதி செய்ய இயலும். மேலும் தற்சமயம் போடப்பட்ட சாலைக்கு Disable period ஒரு வருட காலம் உண்டு. எனவே ஒரு வருட காலக்கட்டத்திற்குள் அந்த சாலையில் ஏற்படும் பழுதுகளை அந்த ஒப்பந்ததாரரே சரி செய்து விடுவார். எனவே புகார்தாரர் மேற்படி சாலை பணியில் ஏற்பட உள்ள பழுதுகள் குறித்து கவலைப்பட தேவையில்லை.

நாகர்கோவில் மாநகராட்சி ஆணையருக்கும் ரௌடி அடியாட்களுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. மேலும் அத்தகைய ரௌடி அடியாட்கள் மீது பதியப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையினை பற்றி எதிர்மனுதாரருக்கு தெரியாது. எதிர்மனுதாரரின் புகழ், பெருமை ஆகியவற்றை கெடுத்து மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் மனுதாரர் தேவையற்ற புகார் மனுக்களை தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி புகார் அடிப்படையில்லாததும் உண்மை தன்மையற்றதுமாகும். மேற்படி புகார் மனு நேர்மையானதல்லாததும் நிலைக்கத்தகாததுமாகும். மேற்படி புகார் மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும்.

எனவே, மாண்புமிகு மன்றம் கருணைக்கூர்ந்து இந்த மறுப்புரையினை ஏற்றுக்கொண்டு புகார் மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு பணிந்து வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

**7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, நாகர்கோவில் மாநகராட்சி உதவிப்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.**

மனுதாரர் நாகர்கோவில் மாநகராட்சியில் 2022–2023 மற்றும் 2023–2024ம் நிதியாண்டில் நடந்த கட்டுமான பணிகள் தரமற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மீனாட்சிபுரம் பரதர் தெருவில் கான்கிரீட் சாலை தரமற்ற முறையில் போடப்பட்டதால் சிமெண்ட் கலவையிலுள்ள எம் சாண்ட் மணல் காற்றில் தூசிபோல் பறக்கிறது. எனவே போடப்பட்ட கான்கிரீட் சாலைகளை ஆய்வு செய்து எதிர்மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

மனுதாரர் தொடர்ந்து புகார் மனுக்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வரும் நிலையில் இம்முறைமன்ற நடுவத்தின் அழைப்பாணையின் பேரில் நேரடி விசாரணைக்கு ஆஜராகாமலும், உரிய காரணங்களை குறிப்பிட்டு தன்னால் நேரில் ஆஜராக முடியாததற்கு விலக்குக்கோரியோ அல்லது மாற்று தேதியில் விசாரணையை மேற்கொள்ளுமாறு கடிதம் எதனையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கவில்லை. இதுபோன்ற நடைமுறைகளை இனிவரும் காலங்களில் தவிர்க்குமாறும் தம்மால் அளிக்கப்படும் புகார் மனுக்கள் குறித்து மேற்கொள்ளப்படும் நேரடி விசாரணயில் தவறாது அழைப்பாணையின் பேரில் நேரில் ஆஜராகுமாறு மனுதாரர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் 2014ம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டத்தில் இம்முறைமன்றத்திற்கு உரிமையியல் நீதிமன்ற அந்தஸ்து அளித்துள்ள நிலையில், மனுதாரர் மேற்குறிப்பிட்ட புகார் மனு அளித்து அம்மனு இம்முறைமன்றத்தால் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டும், விசாரணைக்கு மனுதாரரை நேரடியாக ஆஜராகும்படி கோரி அழைப்பாணை அனுப்பப்பட்டும், மனுதாரர் வசிக்கும் நாகர்கோவில் தலைமையிடத்தில் நடைபெறும் விசாரணைக்கு வராமல் இருந்தது மிகவும் கண்டிக்கத்தக்கது மட்டுமல்லாமல் இம்முறைமன்றத்தின் நேரத்தையும் விரயமாக்கியுள்ளதால் மனுதாரர் திரு.மணவைக்கண்ணன் (எ) M. கண்ணன் அவர்களால் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கப்படும் மனுக்கள் மீது இம்முறை மன்ற நடுவத்தால் 6 (ஆறு) மாதங்களுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாது என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மனுதாரர் குறிப்பிடும் சாலைப்பணிகள் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்ட நிர்வாக ஆணை மற்றும் தொழில் நுட்ப அனுமதியுடன் முறையாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு சாலைப்பணிகள் செய்து முடிக்கப்பட்டன என்றும் மனுதாரரின் புகாரின் பேரில் ஏதேனும் குறைபாடு இருப்பின் சீர்செய்யக்கோரி ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு அனுப்பப்படும் என்றும் மேலும் அந்த பணியினை பொறுத்து ஒப்பந்ததாரருக்கு எந்தப்பணமும் பட்டுவாடா செய்யப்படவில்லை என்றும் தற்சமயம் போடப்பட்ட சாலைக்கு Disable period ஒரு வருட காலம் உண்டு என்றும் எனவே ஒரு வருட பழுதுகளை அந்த ஒப்பந்ததாரரே சரிசெய்து விடுவார் என்பதையும் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது. எனவே நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையின் அடிப்படையில் இப்புகார் மனு மீதான

நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாமென கருதி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.மணவைக்கண்ணன் (எ) M. கண்ணன்
த/பெ. T. மாயப்பெருமாள்,
எண்.8, கனரா வங்கி பில்டிங்
பார்வதிபுரம்
நாகர்கோவில் –3.
கன்னியாகுமரி மாவட்டம்.

2) ஆணையர்
நாகர்கோவில் மாநகராட்சி,
நாகர்கோவில்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028

4) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர் 10/11